# மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத்தை பிரதமர் மோடி சந்தித்தார்

செப்டம்பர் 08, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடியை மொரீஷியஸ் பிரதமர் திரு. பிரவிந்த் குமார் ஜக்நாத், 8 செப்டம்பர் 2023 அன்று டெல்லியில் ஜி20 உச்சிமாநாட்டின் ஓரமாக சந்தித்தார்.

ஜி20 மாநாட்டில் விருந்தினர் நாடாக பங்கேற்க மொரிஷியஸுக்கு அளிக்கப்பட்ட சிறப்பு அழைப்பிற்காக அந்நாட்டு பிரதமர் ஜக்நாத் இந்திய பிரதமருக்கு நன்றி தெரிவித்தார். இந்திய தலைமையின் கீழ் ஜி20 இன் பல்வேறு பணிக்குழுக்கள் மற்றும் அமைச்சர்கள் கூட்டங்களில் மொரீஷியஸ் தீவிரமாக பங்கேற்றதை பிரதமர் பாராட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 வது ஆண்டு நினைவு தினத்துடன் ஜி20 கூட்டங்கள் நடைபெறுவது குறித்து இரு தலைவர்களும் மகிழ்ச்சி தெரிவித்தனர். இந்தியாவுக்கும் மொரிஷியஸுக்கும் இடையிலான பன்முக இருதரப்பு ஒத்துழைப்பை இரு தலைவர்களும் மதிப்பாய்வு செய்தனர். கடந்த ஆண்டில் 30க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் வருகைகள் மற்றும் 23 இருதரப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதன் மூலம் இருதரப்பு பரிமாற்றங்களின் விரைவான வேகத்தை அவர்கள் குறிப்பிட்டனர்.

சந்திரயான்-3 திட்டத்தின் வெற்றிக்காக பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் ஜக்நாத், விண்வெளித் துறையில் இரு தரப்புக்கும் இடையே மேலும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

**புது டெல்லி**
**செப்டம்பர் 08, 2023**